©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 2.40 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 45] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 30, 2011
கார்த்திகை 14, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 28/2011.**

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம் 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 32/2006.** **2.** (இதன் பின்னர் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் 70–ஆம் பிரிவில் (2)–ஆம் உட்பிரிவில்,– **70–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

(1) இரண்டு இடங்களில் வரும் “அனுப்புதல் அல்லது மாற்றுதல்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக “விற்கப்படுதல் அல்லது அனுப்புதல் அல்லது மாற்றுதல்” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) “அனுப்புநர் அல்லது மாற்றுநர்” என்னும் சொற்றொடர் வரும் இடங்களிலெல்லாம் ‘‘விற்பனையாளர் அல்லது அனுப்புநர் அல்லது மாற்றுநர்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**3.** முதன்மைச் சட்டத்தின் ஆறாம் இணைப்புப் பட்டியலில் 9–ஆம் வரிசை எண்ணுக்கும் அது தொடர்பான பதிவுகளுக்கும் பின்பு, பின்வரும் வரிசை எண்களும் பதிவுகளும், முறையே சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:– **ஆறாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.**

“10. சேர்க்கைகள் உள்ள அல்லது சேர்க்கைகள் அல்லாத பெட்ரோல்.

11. உயர்வேக டீசல் எண்ணெய்.

12. இலகுரக டீசல் எண்ணெய்.’’.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2011–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 30/2011.**

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) (a) இச்சட்டத்தின் 5–ஆம் பிரிவு நீங்கலான வகைமுறைகள், 2011–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 12–ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) 5–ஆம் பிரிவானது 2011–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3–ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006. **2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் முதலாம் இணைப்புப் பட்டியலில்,– முதலாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

(1) பகுதி–B–இல்,–

(a) ''நூற்றுக்கு 4 விழுக்காடு வீதத்தில் வரிவிதிக்கத்தக்க பொருள்கள்'' என்னும் தலைப்பிற்குப் பதிலாக, ''நூற்றுக்கு 5 விழுக்காடு வீதத்தில் வரிவிதிக்கத்தக்க பொருள்கள்'' எனும் தலைப்பானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) 2–ஆம் வரிசை எண்ணுக்கு எதிரில் உள்ள பதிவுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(c) 27–ஆம் வரிசை எண்ணின் (i) மற்றும் (ii) ஆகியவற்றிற்கு எதிரில் உள்ள பதிவுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(d) 127–ஆம் வரிசை எண்ணுக்கு எதிரில் உள்ள பதிவுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2) பகுதி–C–இல்,–

(a) ''நூற்றுக்கு 12.5 விழுக்காடு வீதத்தில் வரிவிதிக்கத்தக்க பொருள்கள்'' என்னும் தலைப்பிற்குப் பதிலாக, நூற்றுக்கு 14.5 விழுக்காடு வீதத்தில் விரிவிதிக்கதக்க பொருள்கள்'' எனும் தலைப்பானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) 9–ஆம் வரிசை எண்ணிற்கும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பின்பு, பின்வரும் வரிசை எண்ணும் பதிவுகளும் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(9–A) பீடி மற்றும் புகையிலை பீடி'';

(c) 13–ஆம் வரிசை எண்ணிற்கும் அது தொடர்பான பதிவுகளுக்கும் பின்பு, பின்வரும் வரிசை எண்ணும் பதிவுகளும் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(13-A) (i) கைத் தொலைபேசி (கைப்பேசி)

(ii) ஐ–பாட்

(iii) ஐ–போன்

(iv) எல்.சி.டி திரை / எல்.இ.டி.திரை

(v) டி.வி.டிக்கள் மற்றும் சி.டிக்கள்

(vi) மேற்சொன்ன அனைத்து இனங்களின் பாகங்கள் மற்றும் துணைக்கருவிகள்.''.

இரண்டாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் இரண்டாம் இணைப்புப் பட்டியலில் 12–ஆம் வரிசை எண்ணிற்கும் அது தொடர்பான பதிவுகளுக்கும் பின்பு, பின்வரும் வரிசை எண்ணும் பதிவுகளும் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''13. (i) உற்பத்தி செய்யப்படாத கச்சாப் புகையிலை மற்றும் புகையிலை கழிவு;

(ii) குட்கா, பான் மசாலா;

(iii) சுருட்டுகள் மற்றும் சிகரெட்டுகள், சிறிய மெல்லிய சுருட்டுகள், புகையிலை அல்லது புகையிலைக்குப் பதிலாக அமைந்தவற்றலான புகைப்பொருள்களிலான புகைச் சுருள்கள்; இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் நூற்றுக்கு 20 விழுக்காடு.".

(iv) உரூக்கா / உரூட்கு புகையிலை;

(v) புகைக் குழாய்கள் மற்றும் சிகரெட்டுகளுக்குரிய புகையிலைக் கலவை;

(vi) சீராக்கப்பட்ட அல்லது மறுபடி தயாரிக்கப்பட்ட புகையிலை;

(vii) மெல்லக்கூடிய புகையிலை;

(viii) மெல்லக்கூடிய புகையிலையைக் கொண்டிருக்கிற தயாரிப்புகள்;

(ix) ஜரிதா, வாசனையூட்டப்பட்ட புகையிலை;

(x) புகையிலையிலான மூக்குப்பொடி மற்றும் புகையிலையிலான மூக்குப்பொடியைக் கொண்டிருக்கிற தயாரிப்புகள்;

(ix) புகையிலை வடிப்பு மற்றும் சாரம்;

(xii) வெட்டப்பட்ட புகையிலை;

(xiii) இணைப்புப் பட்டியல்கள் எதனிலும் குறித்துரைக்கப்படாத பிறவாறான புகையிலைத் தயாரிப்புகள்.

நான்காம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்

**4.** முதன்மைச் சட்டத்தின் நான்காம் இணைப்புப் பட்டியலில்:—

**(1)** பகுதி–A மற்றும் அதன்கீழ் உள்ள அனைத்துப் பதிவுகளும் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**(2)** பகுதி–B-இல்,

(a) **1–**ஆம் வரிசை எண்ணுக்கு எதிரில் உள்ள பதிவானது, அந்த வரிசை எண்ணின் பதிவு (i) ஆக மறு எண்ணிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட பதிவு (i)–க்குப் பின்பு, பின்வரும் பதிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(ii) மனித ஆற்றலால் இயங்காத அல்லது மிருகங்களால் இயக்கப்படாத வேளாண் உபகரணங்கள், திவலைப் பீற்றிகள், தெளிப்பான்கள் மற்றும் சொட்டுநீர் பாசன சாதனங்கள் மற்றும் அவற்றின் பாகங்களும் துணைக்கருவிகளும் உள்ளடங்கலாக.''.

(b) 14–ஆம் வரிசை எண்ணிற்கும் அது தொடர்பான பதிவுகளுக்கும் பின்பு, பின்வரும் வரிசை எண்ணும் பதிவுகளும் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"14–A (i) கரும்பு அல்லது பீட் சர்க்கரை மற்றும் திட வடிவிலான இரசாயனத்தால் சுத்தம் செய்யப்பட்ட கருப்பு வெல்லம்.

(ii) பனஞ் சர்க்கரை.";

(c) 17–ஆம் வரிசை எண்ணிற்கும் அது தொடர்பான பதிவுகளுக்கும் பின்பு, பின்வரும் வரிசை எண்ணும் பதிவுகளும் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"17-A (i) இரசாயன உரங்கள்

(ii) புழு பூச்சிக் கொல்லிகள், பூச்சிக் கொல்லிகள், கொறி விலங்கு கொல்லிகள், நோய் நுண்மக் கொல்லிகள், களைக்கொல்லிகள், பூஞ்சனக் கொல்லிகள், மூலிகைக் கொல்லிகள் மற்றும் அவற்றின் கலவைகள், கணைத் தடுப்பான்கள், தாவர வளர்ச்சி சீராக்கிகள், தாவர ஊட்டச்சத்துக்கள், மைக்ரோ ஊட்டச்சத்துக்கள், தாவர உரங்கள், நோய் எதிப்பான்கள் மற்றும் அனைத்து வகையான மற்றும் வடிவிலான ஜிப்சம்" ;

(d) 65–ஆம் வரிசை எண்ணில் "ஐந்நூறு கோடிகள்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "ஐந்து கோடிகள்" எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(e) 77–ஆம் வரிசை எண்ணிற்க்கும் அது தொடர்பான பதிவுகளுக்கும் பின்பு, பின்வரும் வரிசை எண்ணும் பதிவுகளும் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"77-A. இந்தியாவில் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் துணிகள் அல்லது நெய்யப்பட்ட துணிகள்:–

(1) பட்டு மற்றும் பட்டுக் கழிவினால் நெய்யப்பட்ட துணிகள்

(2) (i) முடிவார்ப்பட்டைகள் நீங்கலாக நெய்யப்பட்ட நார்க் கம்பளித் துணிகள்

(ii) முடிவார்ப்பட்டைகள் நீங்கலாக சீர்செய்து நெய்யப்பட்ட கம்பளித் துணிகள்

(3) நெய்யப்பட்ட பருத்தித் துணிகள்

(4) (i) செயற்கைச் சேர்ம இழை நூலினாலான நெய்யப்பட்ட துணிகள்

(ii) செயற்கை இழை நூலினாலான நெய்யப்பட்ட துணிகள்

(5) (i) செயற்கைச் சேர்மத் தரநிலை இழைகளினால் நெய்யப்பட்ட துணிகள்

(ii) செயற்கைத் தரநிலை இழைகளினால் நெய்யப்பட்ட துணிகள்

(6) (i) கம்பளி, பருத்தி அல்லது மனிதத் தயாரிப்பு இழைகளினால் நெய்யப்பட்ட அடுக்குத் துணிகள் மற்றும் மெத்தென்ற வகைத் துணிகள்

(ii) பூத்துவாலைத் துணிகள் மற்றும் அதைப் போன்று நெய்யப்பட்ட பூ மெத்தைத் துணிகள் மற்றும் கொத்து வகைத் துணிகள்

(iii) மென்வலைத் துணி

(iv) பருத்தி அல்லது மனிதத் தயாரிப்பு இழைகளினாலான பூவணிகளில் நீள் கண்டுகளில் அல்லது பூவேலைத் துண்டுகளில் பூவேலைப்பாடுகள்

(v) பூத்தையல் வேலை செய்த பூவணிகள், நீள் துண்டுகள் அல்லது பூ வேலைத் துண்டுகள்,

(vi) குறுகலான நெசவுத் துணிகள்

(7) (i) புத்தகங்களில் வெளி அட்டைகள் அல்லது அதைப் போன்றவற்றிற்கு உபயோகப்படுத்தப்படும் பசை அல்லது மாவுச் சத்துக்கள் பூசப்பட்ட நெசவுத் துணிகள் மற்றும் நகலெடுக்கும் துணி சித்திரம் வரைய தயார் செய்யப்பட்ட கித்தான், பசையூட்டப்பட்ட அல்லது அதைப் போன்ற விறைப்பாக்கப்பட்ட நெசவுத்துணி

(ii) நைலான் முறுக்கு நூலினாலான உருளிகளில் பயன்படுத்தப்படும் நூலிழைத் துணிகள் அல்லது பாலியமைட்டுகள், பாலியஸ்டர்கள் அல்லது விஸ்கோஸ் ரேயான் துணிகள்

(iii) பிளாஸ்டிக்கினால் செறியூட்டப்பட்ட, மேற்பூச்சுடைய, மேற்பரப்பபட்ட அல்லது பளபளப்பூட்டப்பட்ட நெசவுத் துணிகள்

(iv) துணிக் கற்றை அல்லது துணிக் கற்றைக் கொண்ட தயாரிப்புகளால் பகுதியாக அல்லது முழுவதுமாக மேற்பரப்பபட்ட துணிகள்

(8) 'நீள் அடுக்குத்' துணிகள் உள்ளடங்கலான, அடுக்குத் துணிகள் மற்றும் பின்னப்பட்ட அல்லது கொக்கி ஊசிமூலம் பின்னப்பட்ட பூத்துவாலைத் துணிகள்,''

ஐந்தாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் ஐந்தாம் இணைப்புப் பட்டியலில் 13–ஆம் வரிசை எண்ணிற்கும் அது தொடர்பான பதிவிற்கும் பின்பு, பின்வரும் வரிசை எண்ணும் அது தொடர்பான பதிவும் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''14. ஆசிய வளர்ச்சி வங்கி.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.